# கொவிட்-19 முன்னிலையில் சமூகப் - பொருளாதாரச் சுட்டி

முதனிலை அறிக்கை

ஜூன் 2021

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் : சோஷல் இண்டிகேட்டர்

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| அறிமுகம் | ii |
| ஆய்வு முறைமை | iii |
| இலங்கையில் கொவிட்-19 இன் முகாமைத்துவ செயற்பாடுகள் மீதான திருப்தி | 01 |
| கொவிட்-19 இனை கட்டுப்படுத்துவதில் நிறுவனங்களின் செயற்பாடு | 02 |
| வாழ்க்கைச் செலவு மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் | 03 |
| வைத்தியநல சேவை | 04 |
| கல்வி | 04 |
| தொழில் பாதுகாப்பு | 05 |
| தொற்றுநோய்ப் பரலலைக் கட்டுப்படுத்துதல் | 05 |
| நபர்களை நியாயமாக நடாத்துதல் | 06-07 |
| தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான மூலாதாரங்கள் | 08 |
| அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள கொவிட்-19 விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் குறித்து அறிந்துவைத்துள்ள மட்டங்கள் | 09 |
| தகவல்களைப் பெற்றுக்கொள்கின்ற மூலாதாரங்கள் | 09 |
| வாழ்வாதாரம் மீதான தாக்கம் | 10 |
| குடும்பத்தின் பொதுவான நிதி நிலைமை | 11 |
| நிதிப்பற்றாக்குறைக் காரணமாக எதிர்கொள்ளும் விளைவுகள் | 12 |
| தொற்றுநோய்க் காரணமாக வருமானத்தின் மீதான தாக்கம் | 13 |
| வருமானக் குறைவைச் சமாளிக்க பின்பற்றும் உத்திகள் | 14 |
| கல்வி மீதான தாக்கம் | 16 |
| இணையவழி கற்றலுக்கான அணுகல் | 17-18 |
| இணையவழி கற்றலின் தரம் குறித்த திருப்தி | 19 |
| சமூக உறவுகள் மீதான தாக்கம் | 20 |
| நண்பர்கள், உறவினர்கள் மற்றும் அயலவர்களுடனான இடைத்தொடர்புகள் | 21 |
| சமூகப் பங்கேற்பு | 22 |
| சமூகங்களுக்கிடையிலான உறவுகளின் மீதான தாக்கம் | 23-24-25 |
| வைத்தியநல சேவை மீதான தாக்கம் | 26 |
| வைத்தியநல சேவைகளுக்கான அணுகல் | 27 |
| தடுப்பூசி தொடர்பான அபிப்பிராயம் | 28 |

# அறிமுகம்

கொரோனா பரவலானது 31ஆம் திகதி டிசம்பர் 2019 அன்று முதன்முதலாக சீனாவின் ஹுபெய் மாகாணத்திலுள்ள வூஹான் நகரத்தில் பதிவிடப்பட்டது. 30ஆம் திகதி ஜனவரி 2020 அன்று உலக சுகாதார நிறுவனம் இந்த கொரோனா வைரஸை சர்வதேசத்தின் அக்கறைக்கான பொதுச் சுகாதார அவசரநிலை என்று அறிவித்து, 11ஆம் திகதி மார்ச் 2020 அன்று அதனை சர்வதேச பரவலாக அறிவித்தது. 27ஆம் திகதி ஜனவரி 2020 அன்று இந்த வைரஸ் முதன்முதலாக இலங்கையில் கண்டறியப்பட்டது. தற்போது மொத்தமாக 140,471 உறுதிப்படுத்தப்பட்ட நோயாளிகள் மற்றும் 941 இறப்புக்களுடன், முடக்கங்கள், நாடு தழுவிய பயணக் கட்டுப்பாடுகளை அமுல்படுத்தி, பல்வேறு கிராம சேவக பிரிவுகளின் பகுதிகளைத் தனிமைப்படுத்தி, பாடசாலைகள், வணிகங்களை முழுமையாக மூடி தொற்றுநோயின் சர்வதேச பரவலுடன் இலங்கை போராடுகின்றது. இவை இலங்கையின் அன்றாட வாழ்க்கையைப் பல வழிகளில் கடுமையாகப் பாதித்துள்ளன. இந்த ஆய்வின் முக்கிய நோக்கமானது பொதுமக்களின் கருத்துக்களை கண்டறிவது மற்றும் தொற்றுநோயானது அவர்களின் வாழ்வாதாரங்கள், வைத்தியநல சேவை, கல்வி மற்றும் சமூக உறவுகளை எந்த அளவிற்கு பாதித்துள்ளது என்பதைப் பற்றி அறிந்துகொள்வதற்காகும். தற்போதைய நிலைமை அரசானது சமூக, பொருளாதார காரணிகளின் அடிப்படையில் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும் மேம்படுத்தவும் வேண்டியதன் தேவையை அதிகரித்துள்ளது. எனவே இது தொடர்பான பொதுமக்களின் கருத்துக்களை அறிந்துகொள்வது அவசியமாகும்.

இந்த முதனிலை அறிக்கையானது கொவிட்-19 நெருக்கடியினைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் பொது மக்களின் திருப்தி மட்டம், நபர்களை நியாயமாக நடத்துதல், சமூகங்களுக்கிடையிலான உறவுகள், கொவிட்-19 சர்வதேசத் தொற்றுப் பரவல் பற்றிய விழிப்புணர்வு, அவை சார்ந்த தகவலைப் பெறும் மூலாதாரங்கள், வருமானக் குறைவு காரணமாக ஏற்பட்ட விளைவுகளை சமாளிக்க கையாளும் உத்திகள், கல்வி, வைத்தியநல சேவைகள் போன்றவற்றின் மேலோட்டமான கண்ணோட்டத்தை வழங்குகின்றது.

ஆய்வுக் குழுவானது கலாநிதி. பிரதீப பீரிஸ், சகீனா மொயினுதீன் மற்றும் மா. கிருஷ்ணமூர்த்தி ஆகியோரை உள்ளடக்கியுள்ளது.

சோஷல் இன்டிகேட்டரானது இவ் ஆய்விற்கு உதவிய கலாநிதி. பாக்கியசோதி சரவணமுத்து மற்றும் பவானி பொன்சேகா ஆகியோருக்கு நன்றி தெரிவிக்க விரும்புகின்றது. அத்துடன் இவ் ஆய்விற்காக நிதியுதவியளித்த “நீதி, உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான உலகளாவிய முன்முயற்சி” [Global Initiative for Justice Truth and Reconciliation (GIJTR)] அமைப்பிற்கும் நன்றி தெரிவிக்க விரும்புகின்றது.

1https://covid19.gov.lk/covid-19-stats.html, Official website for Sri Lanka|s response to COVID–19, accessed 16 May 2021

# ஆய்வு முறைமை

இந்த ஆய்வானது பகுதியாகக் கட்டமைக்கப்பட்ட வினாக்கொத்தைப் பயன்படுத்தி 25 மாவட்டங்களில் உள்ள முக்கிய நான்கு இனச் சமூகங்கள் மற்றும் கிராமப்புற மற்றும் நகர்ப்புற சமூகங்கள் என்பவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 1000 பதிலளிப்பவர்களுடன் நேருக்குநேரான நேர்காணல்கள் மூலம் நடத்தப்பட்டது. வாழ்வாதாரம், வைத்தியநல சேவை, கல்வி மற்றும் சமூக உறவுகள் ஆகிய விடையங்களில் தொற்றுநோயின் தாக்கம் குறித்து பொதுமக்களின் கண்ணோட்டத்தை அறிவதே இவ் ஆய்வின் நோக்கமாகும். வெளிக்களப் பணிகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் வெளிக்கள ஆய்வாளர்களுக்கு ஆய்வு, வினாக்கொத்து மற்றும் கள நுட்பங்கள் குறித்து விரிவான பயிற்சிகள் அளிக்கப்பட்டது.

**பரிசோதனை ஆய்வு:**

மொழியின் தெளிவு, கேள்விகளின் ஒழுங்கு மற்றும் பதில் வகைகளின் பொருத்தம் ஆகியவற்றைச் சோதனைச் செய்யும் வகையில் சிரேஷ்ட கள ஆய்வாளர்கள் குழுவினால் பிரதான ஆய்விற்கு முன்னர் ஒரு பரிசோதனை ஆய்வு நடாத்தப்பட்டது. பரிசோதனை ஆய்வுக்கான வெளிக்கள விளக்கக்கூட்டம் 15ஆம் திகதி பெப்ரவரி 2021 அன்று நடாத்தப்பட்டது. இப் பரிசோதனை ஆய்வானது 2021 பெப்ரவரி மாதம் 16ஆம் மற்றும் 17ஆம் திகதிகளில், சிங்கள மற்றும் தமிழ் பேசும் சமூகங்களைச் சேர்ந்த பதிலளிப்பவர்களிடையே மேற்கொள்ளப்பட்டது. இப்பரிசோதனை ஆய்வில் விளங்கிக்கொண்ட விடயங்களை அடிப்படையாகக்கொண்டு, வினாக்கொத்து மேலும் விருத்தி செய்யப்பட்டது.

**விரிவான ஆய்வு:**

விரிவான ஆய்விற்கான வெளிக்கள விளக்கக் கூட்டமானது பெப்ரவரி 2021 27ஆம் மற்றும் 28ஆம் திகதிகளில் ஆரம்பமாகியது. இந்த ஆய்வில் ஆண்களும் பெண்களுமாக மொத்தம் 71 வெளிக்கள ஆய்வாளர்கள் பங்கேற்றனர். நேர்காணல்கள், பதிலளிப்பவர் மற்றும் ஆய்வாளர்கள் ஆகிய இருவரினதும் சொந்த மொழியில் நடாத்தப்பட்டன. சேகரிக்கப்பட்ட தரவின் தரத்தை உறுதி செய்வதற்காக, வெளிக்களப்பணியின் போது உடன்விஜயங்களும் வெளிக்களப்பணியின் பின்னர் மீள்சோதனைகளும் மேற்கொள்ளப்பட்டன. பகுப்பாய்வுக்கு சமூக விஞ்ஞானத்திற்கான புள்ளிவிபரப் பொதி (SPSS) பயன்படுத்தப்பட்டது.

2021 பெப்ரவரி 27ஆம் திகதி முதல் மார்ச் மாதம் 24ஆம் திகதி வரை வெளிக்களப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

# இலங்கையில் கொவிட்-19 இன் முகாமைத்துவ செயற்பாடுகள் மீதான திருப்தி

# கொவிட்-19 இனை கட்டுப்படுத்துவதில் நிறுவனங்களின் செயற்பாடு


நாட்டில் கொவிட்-19 நெருக்கடியைக் குறைப்பதற்காக பல்வேறு நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் குறித்து தங்களுக்குள்ள திருப்தி நிலையைக் குறிப்பிடுமாறு பதிலளித்தவர்களிடம் கேட்கப்பட்டது. பதிலளிப்பவர்களில் கணிசமான பகுதியினர் தமது பிரதேசப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் கிராம சேவகர்கள், பொலிஸ், இராணுவம் மற்றும் ஜனாதிபதி ஆகியோரின் செயற்பாடுகள் தொடர்பில் திருப்தியடைவதாகக் குறிப்பிடுகின்றனர். தமது பிரதேசப் பாராளுமன்றப் பிரதிநிதிகளின் செயற்பாடு குறித்து அவர்களுக்குக் குறைந்தளவான திருப்தி மட்டமே காணப்படுகின்றது.



# வாழ்க்கைச் செலவு மற்றும் அத்தியாவசியப் பொருட்கள்


கொவிட்-19 தொற்றின் போது வாழ்க்கைச் செலவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் கையாள்வதில் அரசாங்கத்தின் செயற்பாடு குறித்து தங்களின் திருப்தி மட்டத்தைக் குறிப்பிடுமாறு பதிலளிப்பவர்களிடம் கேட்கப்பட்டது. பதிலளித்தவர்களில் பெரும்பாலானோர் (58.1%) அரசாங்கத்தின் செயற்பாடு தொடர்பில் திருப்தியடைவதாகக் குறிப்பிடுகின்றனர். அத்துடன் பதிலளித்தவர்களில் 40.1% கொவிட்-19 தொற்றின் போது வாழ்க்கைச் செலவைக் கையாள்வதில் அரசாங்கத்தின் செயற்பாடு குறித்து திருப்தியடைவதாகத் தெரிவித்தனர். நகர்ப்புறம் மற்றும் கிராமப்புறங்களைப் பொறுத்தவரையில், நகர்ப்புற சமூகங்களில் உள்ளவர்களைவிட பெரும்பாலும் கிராமப்புற சமூகங்களில் உள்ளவர்களே திருப்தியடைவதாகக் குறிப்பிடுகின்றனர். நகர்ப்புற மற்றும் கிராமப்புற சமூகங்களில் உள்ள பெரும்பான்மையானோர் அதிருப்தி அடைவதாகத் தெரிவித்திருந்தாலும், சற்று அதிக விகிதமான நகர்ப்புற சமூகத்தினர் இக்கருத்தைக் கொண்டுள்ளனர்.

**கொவிட் 19 இன் போது வாழ்க்கைச் செலவைக் கையாள்வதில் அரசாங்கத்தின் செயற்பாடு குறித்து நீங்கள் எந்தளவு திருப்தியடைகின்றீர்கள்?**





பதிலளித்தவர்களில் பெரும்பாலானோர் (66.4%) அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் கட்டுப்படுத்துவதில் அரசாங்கத்தின் செயற்பாடு தொடர்பில் அதிருப்தியடைவதாகக் குறிப்பிடுகின்றனர். பதிலளித்தவர்களில் அண்ணளவாக மூன்றில் ஒரு பகுதியினர் திருப்தியடைவதாகக் குறிப்பிடுகின்றனர். நகர்ப்புறம் மற்றும் கிராமப்புறங்களைப் பொறுத்தவரையில், நகர்ப்புறங்களில் உள்ளவர்களை விட (25.4%) பெரும்பாலும் கிராமப்புற (35.1%) சமூகத்தவர்களே திருப்தியடைவதாக குறிப்பிடுகின்றனர். அதிருப்தியடைந்ததாகக் குறிப்பிடும் பெரும்பான்மையானோரில், கிராமப்புற சமூகத்தினரை விட (64.3%) சற்று அதிகமான நகர்ப்புற சமூகத்தினர் (73.2%) இதனை உணர்கின்றனர்.

**அத்தியாவசியப் பொருட்களின் விலையைக் கட்டுப்படுத்துவதில் அரசின் முகாமைத்துவம்**




# வைத்தியநல சேவை

பதிலளிப்பவர்களில் பெரும்பான்மையினர் (அண்ணளவாக 80%) தாங்கள் திருப்தியடைவதாகக் குறிப்பிடுவதுடன் 21.3% அதிருப்தியடைவதாகவும் குறிப்பிடுகின்றனர். திருப்தியடைவதாகக் குறிப்பிடுபவர்களில் பெரும்பான்மையானோர் கிராமப்புறச் சமூகங்களைச் (81.1%) சேர்ந்தவர்களாவர்.




# கல்வி


கல்வி தொடர்பான அபிப்பிராயங்களில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. கொவிட்-19 தொற்றுநோயின் போது அரசாங்கம் பாடசாலைக் கல்வியைக் கையாண்ட விதம் தொடர்பில் பதிலளிப்பவர்களில் பெரும்பான்மையினர் (50.5%) தாங்கள் திருப்தியடைவதாகவும், 46% அதிருப்தியடைவதாகவும் தெரிவிக்கின்றனர். இந்தக் கருத்தானது நகர்ப்புற மற்றும் கிராமப்புற சமூகங்கள் இரண்டிலும் காணப்படுகின்றன. தொற்றுநோயின் போது அரசாங்கம் பாடசாலைக் கல்வியைக் கையாண்ட விதம் தொடர்பில் நகர்ப்புற மற்றும் கிராமப்புற சமூகங்களைச் சேர்ந்த பதிலளிப்பவர்களில் ஏறத்தாழ சமமான விகிதத்தினர் திருப்தியடைவதாகவோ அல்லது அதிருப்தியடைவதாகவோ தெரிவிக்கின்றனர்.



# தொழில் பாதுகாப்பு

கொவிட்-19 தொற்றின் போது தொழில்கள் மற்றும் தொழில் வாய்ப்புக்களைப் பாதுகாத்தல் தொடர்பில் அரசாங்கத்தின் முகாமைத்துவம் பற்றி கேட்கப்பட்ட போது, பதிலளிப்பவர்களில் பெரும்பான்மையானோர் (52.7%) அரசாங்கத்தின் முயற்சிகளில் திருப்தியடைவதாகக் கூறும் அதேநேரம் ஏறத்தாழ 40% அரசாங்கத்தின் முயற்சிகளில் அதிருப்தியடைவதாகக் கூறுகின்றனர். நகர்ப்புற மற்றும் கிராமப்புற சமூக அடிப்படையில் நோக்குகையில் திருப்தியடைவதாகக் கூறுபவர்களில் பெரும்பாலானவர்கள் கிராமப்புற சமூகத்தைச் சார்ந்தவர்களாகவும், அதிருப்தியடைந்ததாகக் கூறுபவர்களில் பெரும்பாலானவர்கள் நகர்ப்புறச் சமூகத்தைச் சார்ந்தவர்களாகவும் உள்ளனர்.


**கொவிட்–19 இன் போது தொழில்கள் மற்றும் தொழில் வாய்ப்புக்களை பாதுகாத்தல் தொடர்பில் அரசின் முகாமைத்துவம்**




# தொற்றுநோய்ப் பரவலைக் கட்டுப்படுத்துதல்

கொவிட்-19 தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்துவதில் அரசாங்கத்தின் செயற்பாடு குறித்து பதிலளிப்பவர்களில் பெரும்பாலானோர் திருப்திடைவதாகத் தெரிவிக்கின்றனர். பதிலளிப்பவர்களில் அண்ணளவாக மூன்றில் ஒரு பகுதியினர் அதிருப்தியடைந்ததாகக் கூறுகின்றனர். திருப்தியடைந்ததாகக் கூறுபவர்களில், பெரும்பாலானவர்கள் கிராமப்புற சமூகத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர். அதேசமயம் அதிருப்தியடைந்ததாகக் கூறுபவர்களில், பெரும்பாலானவர்கள் நகர்ப்புறச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

**கொவிட்–19 தொற்றுநோயப் பரவலைக் கட்டுப்படுத்துதலில் அரசாங்கத்தின் முகாமைத்துவம்**




# நபர்களை நியாயமாக நடாத்துதல்

கொவிட்-19 தொற்றின் போது நபர்களை நியாயமாக நடாத்துதல் தொடர்பில் கவனம் செலுத்துகையில், சமூகத்தில் உள்ள வருமானம் மற்றும் இனம் சார்ந்து வேறுபடும் மக்கள் மத்தியில் கொவிட்-19 தொற்று தொடர்பான விதிகள் மற்றும் வழிகாட்டல்கள் அரசாங்கத்தால் நியாயமாக அமுல்படுத்தப்படுவது பற்றி தமது அபிப்பிராயத்தை தெரிவிக்குமாறு பதிலளிப்பவர்களிடம் கேட்கப்பட்டது.


வேறுபட்ட வருமான மட்டங்களைச் சேர்ந்த நபர்களை நடாத்துதல் குறித்து நோக்கும் போது, கொவிட்-19 தொற்றின் விதிகள் மற்றும் வழிகாட்டுதல்கள், அனைத்து வருமான மட்டங்களையும் சேர்ந்த நபர்கள் மத்தியில் அரசாங்கத்தால் நியாயமான முறையில் நடைமுறைப்படுத்தப்படுவதாக பதிலளிப்பவர்களில் ஏறத்தாழ 46% தெரிவிக்கின்றனர். பதிலளிப்பவர்களில் ஏறத்தாழ 40% இக் கருத்தை மறுக்கின்றனர். விதிகள் மற்றும் வழிகாட்டுதல்கள் சமூகத்தில் உள்ள அனைத்து வருமானக் குழுக்களுக்கும் நியாயமாக நடைமுறைப்படுத்தப்பட்டதாக பெரும்பாலான கிராமப்புற சமூகத்தினர் நம்பினாலும், நகர்ப்புற சமூகத்தின் பெரும்பாலானோர் இதை மறுக்கின்றனர்.

**வேறுபட்ட வருமான மட்டங்களைச் சேர்ந்த குழுக்களிடையே அரசாங்கத்தின் கொவிட்–19 விதிகள் அல்லது வழிகாட்டுதல்கள் எந்தளவு நியாயமான முறையில் நடைமுறைப்படுத்தப்படுகின்றன?**



இனம் சார்ந்து வேறுபடும் மக்களை நடாத்துவது குறித்து நோக்குகையில், பதிலளிப்பவர்களில் ஏறத்தாழ 47மூ சமூகத்தில் உள்ள அனைத்து இனக்குழுக்கள் மத்தியிலும் விதிகள் மற்றும் வழிகாட்டுதல்கள் நியாயமான முறையில் நடைமுறைப்படுத்தப்படுவதாகத் தெரிவிக்கின்ற அதே நேரத்தில் பதிலளிப்பவர்களில் ஏறத்தாழ 37மூ இக்கருத்தை மறுக்கின்றனர். இன ரீதியாக நோக்குகையில் சமூகத்தில் உள்ள இனக்குழுக்கள் மத்தியில் கொவிட்-19 விதிகள் மற்றும் வழிகாட்டுதல்கள் நியாயமற்ற முறையில் நடைமுறைப்படுத்தப்படுவதாக பெரும்பாலான முஸ்லீம் சமூகத்தினரே (54மூ) தெரிவிக்கின்றனர். சிங்கள சமூகத்தவர்களின் அபிப்பிராயத்தை போன்றே தமிழ் மற்றும் மலையகத்தமிழ் சமூகத்தவர்களும் கொவிட்-19 விதிகள் மற்றும் வழிகாட்டுதல்கள் அரசாங்கத்தால் நியாயமான முறையில் நடைமுறைப்படுத்தப்படுவதாகத் தெரிவிக்கின்றனர்.

**அனைத்து இனக் குழுக்களிடையேயும் அரசாங்கத்தின் கொவிட்-19 விதிகள் (வழிகாட்டுதல்கள்) எந்தளவு நியாயமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன?**




# தகவல்களைப் பெற்றுக்கொள்கின்ற மூலாதாரங்கள்

# அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள கொவிட்–19 விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் குறித்து அறிந்து வைத்துள்ள மட்டங்கள்

நேர்காணல் செய்யப்பட்ட ஏறத்தாழ அனைத்து பதிலளிப்பவர்களும், அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள கொவிட்-19 விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் பற்றி அறிந்து வைத்துள்ளதாக தெரிவிக்கின்றனர்.


**அரசாங்கத்தினால் விதிக்கப்பட்டுள்ள கோவிட்–19 சட்ட திட்டங்கள் தொடர்பில் நீங்கள் எந்தளவில் அறிந்து வைத்துள்ளீர்கள் என்பதைத் தயவு செய்து கூற முடியுமா?**




# தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் மூலாதாரங்கள்

பதிலளிப்பவர்களில் கணிசமான விகிதத்தினர் (80.1மு) கொவிட்-19 விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் பற்றிய தகவல்களை ஊடகங்கள் (தொலைக்காட்சி, வானொளி, பத்திரிகைகள்) மூலம் பெறுவதாகக் கூறுகின்றனர். பதிலளிப்பவர்களில் 13.2மு சமூக ஊடகங்கள் மூலம் தகவல்களைப் பெறுவதாகக் கூறுகின்றனர்.

**அறிந்து வைத்துள்ளீர்கள் எனின், தயவுசெய்து அவை தொடர்பில் நீங்கள் அறிந்து கொண்ட பிரதான மூலங்களை கூற முடியுமா?**




# வாழ்வாதாரம்
# மீதான
# தாக்கம்

# குடும்பத்தின் பொதுவான நிதி நிலைமை

பதிலளித்தவர்களில் பெரும்பான்மையானோர் (67.8%) கொவிட்-19 பரவுவதற்கு முன்னருடன் ஒப்பிடுகையில், தற்பொழுது தங்கள் குடும்பத்தின் நிதி நிலைமை மோசமடைந்துள்ளது என்று குறிப்பிடுகின்றனர். நகர்ப்புறத்துடன் ஒப்பிடுகையில், கிராமப்புற சமூகத்திலிருந்து பதிலளித்தவர்களில் சற்று அதிக சதவீதத்தினர் இவ்வாறு குறிப்பிடுகின்றனர்.

**கொவிட்-19 பரவுவதற்கு முன்னர் இருந்ததுடன் ஒப்பிடுகையில் உங்கள் குடும்பத்தின் தற்போதைய நிதி நிலைமை எப்படி உள்ளது?**






- முன்னேற்றமடைந்துள்ளது
- மாற்றம் இல்லை, அப்படியே உள்ளது
- மோசமடைந்துள்ளது

# நிதிப்பற்றாக்குறைக் காரணமாக எதிர்கொள்ளும் விளைவுகள்

பதிலளிப்பவர்களில் கணிசமான பகுதியினர் தொற்றுநோயின் விளைவாக வீட்டு வாடகை, அடமானம் அல்லது குத்தகை செலுத்துவதில் தாமதம் ஏற்படல், வாங்கும் உணவின் தரத்தைக் குறைத்தல், உணவின் அளவைக் குறைத்தல் மற்றும் ஒரு நாளில் உணவு உட்கொள்ளும் வேளைகளின் எண்ணிக்கையைக் குறைத்தல் போன்ற விளைவுகளை எதிர்கொள்ள வேண்டியிருந்தது என்பதைக் குறிப்பிடுகின்றனர்.

**கொவிட் 19 பரவத் தொடங்கியதிலிருந்து நிதிப்பற்றாக்குறைக் காரணமாக நீங்கள் அல்லது உங்கள் குடும்பத்தில் எவரேனும் பின்வருவனவற்றில் ஏதேனும் செய்ய வேண்டியிருந்ததா?**








ஆம்

# தொற்றுநோய்க் காரணமாக வருமானத்தின் மீதான தாக்கம்

வருமானத்தில் ஏற்பட்டுள்ள தாக்கம் தொடர்பில் நோக்குகையில், பதிலளிப்பவர்களில் பெரும்பாலானோர் (ஏறத்தாழ 60மூ) தொற்றுநோயக் காரணமாக அவர்களின் வீட்டு வருமானம் குறைந்துள்ளது என்று குறிப்பிடுவது தெளிவாகத் தெரிகிறது. பதிலளிப்பவர்களில் சுமார் 10மூ தங்கள் வீட்டு வருமானத்தை முற்றாக இழந்துள்ளதாகக் கூறுகின்றனர். நகர்ப்புற சமூகத்தைச் சேர்ந்த 11.3மூ மற்றும் கிராமப்புற சமூகத்தைச் சேர்ந்த 9மூ இந்த கருத்தைக் கொண்டுள்ளனர்.


**கொவிட்–19 பரவத் தொடங்குவதற்கு முன்னருடன் ஒப்பிடுகையில் உங்கள் தற்போதைய வீட்டு வருமானத்தைப் பற்றி சிந்தித்து, உங்கள் வீட்டு வருமானம் எந்த அளவிற்கு அதிகரித்துள்ளது அல்லது குறைந்துள்ளது என்பதைத் தயவுசெய்து சொல்ல முடியுமா?**





- அதிகரித்துள்ளது
- எவ்வித மாற்றமும் இல்லை
- குறைந்துள்ளது
- வருமானம் முழுமையாக இழக்கப்பட்டள்ளது/ வருமானம் இல்லை
- தெரியாது

# வருமானக் குறைவைச் சமாளிக்கப் பின்பற்றும் உத்திகள்

வீட்டு வருமான இழப்பு அல்லது குறைவின் போது அவர்கள் பின்பற்றும் சமாளிக்கும் உத்திகளை பட்டியல் ஒன்றில் இருந்து தேரிவு செய்யுமாறு பதிலளித்தவர்களிடம் கேட்கப்பட்டது. அரசாங்க உதவி, நண்பர்கள், உறவினர்கள், தெரிந்தவர்களிடம் இருந்து உதவிகள் பெறல், கடன் கொடுப்பவர்கள் / பிறரிடமிருந்து கடன் பெறல், நகை அடகு வைத்தல் / வங்கிகளிடமிருந்து கடன் பெறல், கடனுக்கு பொருட்களை வாங்குதல், சேமிப்பில் இருந்து பயன்படுத்துதல், சில செலவுகளைக் குறைத்துக் கொள்ளல், வருமானத்தை ஈட்டக்கூடிய மாற்று வழிகளை பயன்படுத்தல், மற்றும் பெறுமதியான உடைமைகளை விற்றல் ஆகியவற்றினை இந்தப் பட்டியல் கொண்டிருந்தது.





நகர்ப்புறம்
கிராமப்புறம்
அரசாங்க உதவிகள்
49.6%
29.8%
18.3%
2.3%
34.8%
21.8%
31.4%
11.8%
நண்பர்கள், உறவினர்கள், தெரிந்தவர்களிடம் இருந்து பிறரிடமிருந்து உதவிகள் பெற்றமை
55.7%
9.9%
29.0%
4.6%
52.9%
8.1%
31.9%
6.9%
கடன் தருநர் / வேறுநபர்களிடம் இருந்து முறைசாராக் கடன் பெற்றமை
65.2%
10.6%
21.2%
3.0%
60.5%
8.3%
20.3%
10.7%
நகை அடகு வைத்தமை / வங்கிக் கடன் பெற்றமை
59.8%
9.1%
22.7%
8.3%
46.8%
7.5%
27.8%
17.5%
கடனுக்கு பொருட்களை கொள்வனவு செய்தமை
62.1%
6.8%
21.2%
9.8%
49.3%
5.4%
30.8%
14.3%
சேமிப்பிலிருந்து பயன்படுத்தல்
38.2%
3.1%
33.6%
24.4%
32.3%
5.1%
33.1%
28.2%
சில செலவுகளைக் குறைத்தல்
17.3%
5.3%
38.3%
39.1%
9.2%
1.9%
38.4%
49.7%
வருமானம் ஈட்டும் வேறு வழிகள் பயன்படுத்தல்
78.8%
1.5%
12.9%
6.8%
64.6%
5.3%
19.8%
7.2%
பெறுமதியான உடைமைகளை விற்றல்
91.6%
6.1%
0.8%
0.8%
88.0%
5.6%
3.4%
0.9%
அடிக்கடி
சிலநேரம்
ஒருமுறை
ஒருபோதுமில்லை

# கல்வி மீதான தாக்கம்


# இணையவழிக் கற்றலுக்கான அணுகல்

இணையவழிக் கற்றலுக்கான அணுகல் தொடர்பில், பதிலளிப்பவர்களில் கணிசமான பகுதியினர் போதுமான மின்னணு உபகரணங்கள் இல்லை என்று கூறுகின்றனர். இதனால் அவர்கள் குடும்பத்தின் மற்ற உறுப்பினர்களுடன் மின்னணு உபகரணங்களை பகிர்ந்து கொண்டு அல்லது வெளியில் யாரிடமாவது பெற்று கற்கையை தொடர்வதாக அல்லது இணையவழிக் கற்றல் செயற்பாட்டில் இருந்து முற்றிலும் விலகியிருக்க வேண்டியுள்ளதாக கூறுகின்றனர்.


**இணையவழிக் கற்றலைப் பின்பற்றுபவர்களுக்கு இந்த வீட்டில் போதுமான மின்னணு உபகரணங்கள் (கணினி, ஸ்மார்ட் போன், டாப் போன்றவை) உள்ளனவா?**



பதிலளிப்பவர்களில் கணிசமான சதவீதமானவர்கள் (43%) அவர்களுக்கு இணைய அணுகல் இருந்தாலும் மிகவும் பலவீனமான இணைப்புகளே உள்ளன என்று குறிப்பிடுகின்றனர். நகர்ப்புறம் மற்றும் கிராமப்புறங்களுக்கிடையே ஒரு தெளிவான வேறுபாடு உள்ளது. அதாவது, நகர்ப்புற சமூகத்தில் குறிப்பிடத்தக்க பெரும்பான்மையினர் மிக நல்ல இணைய இணைப்பைக் கொண்டுள்ளனர் என்று குறிப்பிடும் அதே நேரத்தில், மிக அதிக சதவீதமான கிராமப்புற சமூகத்தினர் இணைய இணைப்பு இருந்தாலும் மிகவும் பலவீனமான இணைய இணைப்பையே இருக்கின்றது எனக் குறிப்பிடுகின்றனர்.





இணைய இணைப்புக்கானச் செலவீனம் தொடர்பில், பதிலளித்தவர்களில் பெரும்பாலானோர் (61.3%) இணையவழிக் கற்றலைத் தொடர்வதற்காக இணைய இணைப்பிற்காக (டேட்டா) செலவழிப்பது மிகவும் கடினமாக இருப்பதாகக் குறிப்பிடுகின்றனர். இந்தப் பிரச்சினை கிராமப்புற சமூகத்தவர்களிடம் இருப்பது தெளிவாக விளங்குகின்றது.



# இணையவழிக் கற்றலின் தரம் குறித்த திருப்தி

பதிலளிப்பவர்கள் இணையவழிக் கற்றல் மூலம் பெறப்படும் கல்வியின் தரம் குறித்து வேறுபட்ட கருத்துக்களைக் கொண்டுள்ளனர். பதிலளித்தவர்களில் 52.7% திருப்தியடைவதாகக் கூறினாலும், 41.8% அதிருப்தியடைவதாக தெரிவிக்கின்றனர்.


**இணையவழிக் கற்றலின் தரம் குறித்த திருப்தியின் அளவு**




# சமூக உறவுகள் மீதான தாக்கம்


# நண்பர்கள் உறவினர்கள் மற்றும் அயலவர்களுடனான இடைத்தொடர்டபுகள்

கொவிட்-19 தொற்றின் விளைவாக, பதிலளிப்பவர்களின் கருத்துக்களில் தங்கள் நண்பர்கள், உறவினர்கள் மற்றும் அயலவர்களுடனான உறவு மற்றும் பல்வேறு சமூக செயற்பாடுகளில் ஈடுபடுதல் போன்றவற்றில் வீழ்ச்சி இருப்பதாகத் தெரிகின்றது.




# சமூக பங்கேற்பு



மத நிகழ்வுகளில் பங்கேற்றல்
0.9%
11.5%
72.9%
14.7%
விளையாட்டு அல்லது பிற பொழுதுபோக்கு நடவடிக்கைகளில் பங்கேற்றல்
1.7%
5.5%
55.5%
37.3%
மரணச் சடங்குகள் / திருமணங்கள் / பல்வேறு கொண்டாட்ட நடவடிக்கைகளில் பங்கேற்றல்
0.0%
7.0%
81.5%
11.5%
தேசிய





நகர்ப்புறம்
கிராமப்புறம்
மத நிகழ்வுகளில் பங்கேற்றல்
0.5%
10.7%
70.7%
18.1%
1.0%
11.7%
73.6%
13.7%
விளையாட்டு அல்லது பிற பொழுதுபோக்கு நடவடிக்கைகளில் பங்கேற்றல்
0.5%
3.9%
53.4%
42.2%
2.1%
6.0%
56.1%
35.8%
மரணச் சடங்குகள் / திருமணங்கள் / பல்வேறு கொண்டாட்ட நடவடிக்கைகளில் பங்கேற்றல்
0.0%
2.9%
79.4%
17.7%
0.0%
8.3%
82.1%
9.6%
அதிகரித்தது
அப்படியே இருந்தது
குறைந்தது
பங்கேற்கவே இல்லை

# சமூகங்களுக்கிடையிலான உறவுகளின் மீதான தாக்கம்

வருமானம் குறைந்த மக்கள் வாழும் குடியிருப்புகளில் கோவிட்-19 பரவல் தொடர்பில் நோக்கிய போது, பெரும்பான்மையானவர்கள் (55.6%) வருமானம் குறைந்த மக்கள் வாழும் குடியிருப்புகளில் கோவிட்-19 பரவல் அதிகமாக இருக்கலாம் என்று தெரிவிக்கின்றனர்


**வருமானம் குறைந்த மக்கள் வாழும் குடியிருப்புகளில் கொவிட்–19 பரவல் மிகவும் அதிகமாகக் காணப்படலாம்**




ஏற்றுக்கொள்கின்றேன
ஏற்றுக்கொள்ளவில்லை
தெரியாது


பதிலளிப்பவர்களில் குறிப்பிடத்தக்க பெரும்பான்மையினர் (71.1%) சில மத குழுக்களின் கலாசார / மத நடைமுறைகள் கொவிட்-19 பரவலை அதிகரிக்கும் வாய்ப்பினை ஏற்படுத்தும் என்று நம்புகின்றனர். இக் கருத்தை ஏற்றுக்கொள்ளாதவர்களில் பெரும்பாவானவர்கள் முஸ்லீம் சமூகத்தைச் சேர்ந்த பதிலளிப்பவர்களே.

**சில மதக் குழுக்களின் மத / கலாச்சார நடைமுறைகள் கொவிட்–19 பரவலை அதிகரிக்கும் வாய்ப்பினை ஏற்படுத்தும்**



காவிட்-19 இன் பரவல் தங்கள் சொந்த இனக்குழுக்களிடையே குறைவாக காணப்படுகிறது என்ற கூற்று தொடர்பில் வேறுபட்ட கருத்து இருப்பதாகத் தெரிகின்றது.

**எனது இனச் சமூகத்தைச் சேர்ந்த மக்களிடையே கொவிட்–19 பரவல் குறைவாக காணப்படுகிறது**




# வைத்தியநல சேவை மீதான தாக்கம்

# வைத்தியநல சேவைகளுக்கான அணுகல்


கொவிட்-19 நெருக்கடியின் போது வைத்தியசாலைக்கு / வைத்தியரைச் சந்திக்க வேண்டிய தேவையிருந்த பதிலளிப்பவர்களில், 65.1% அது அவசர மருத்துவ தேவைகளுக்கு என்று குறிப்பிடுகின்றனர். அதே நேரத்தில் ஏறத்தாழ 27% வழக்கமான மருத்துவ தேவைகளுக்கு என்று குறிப்பிடுகின்றனர். மொத்தத்தில், கொவிட்-19 நெருக்கடி நிலவிய போதிலும், பதிலளிப்பவர்கள் தங்களுக்குத் தேவையான மருத்துவ சேவைகளைப் பெற்றுக்கொள்வது இலகுவாக இருந்ததாக கொண்டிருந்ததாகக் கூறுகின்றனர்.

**வைத்தியசாலைக்கு / வைத்தியரைக் காண விஜயம் செய்தீர்களாயின்
அது வழமையான மருத்துவ தேவைக்காகவா அல்லது அவசர மருத்துவ
தேவைக்கா அல்லது முன்னதாகவே
பரிந்துரைக்கப்பட்டதொரு மருந்து / சேவையை பெற்றுக்கொள்ளவா?**




- வழக்கமான மருத்துவ தேவைகள்
- அவசர மருத்துவ தேவைகள்
- முன் பரிந்துரைக்கப்பட்ட மருந்துகள் போன்றவற்றைப் பெறுதல்.

**வைத்தியசாலைக்கு / வைத்தியரிடம் விஜயம் செய்தீர்களாயின்
வைத்தியசாலை/ வைத்தியரிடமிருந்து உரிய சேவையைப் பெறுவது
உங்களுக்கு எந்தளவு இலகுவாக இருந்தது?**





- இலகு
- கடினம்

# தடுப்பூசி தொடர்பான அபிப்பிராயம்

தடுப்பூசி பெற்றுக்கொள்ளல் தொடர்பில், தாம் ஒருபோதும் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள மாட்டோம் என்று 11.3% குறிப்பிடுகின்றனர். அதே நேரத்தில் 21.7% உடனடியாக பெற்றுக்கொள்ள மாட்டோம், ஆனால் எதிர்வரும் காலத்தில் சிலநேரம் பெற்றுக்கொள்வோம் என்று குறிப்பிடுகின்றனர். பதிலளிப்பவர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் மட்டுமே நம்பிக்கையுடன், தாமதமின்றி தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வோம் என்று குறிப்பிடுகின்றனர். தடுப்பூசி பெற்ற மற்றவர்களுக்கு என்ன நடக்கிறது என்று பார்த்து பின்னர் தான் நான் பெற்றுக்கொள்வேன் என்று 27.2% குறிப்பிடுகின்றனர்.

**கொவிட்–19 தடுப்பூசியைப் பெற உங்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டால், பின்வருவனவற்றில் எது உங்கள் கருத்தை சிறப்பாக பிரதிபலிக்கின்றது?**




- தாமதிக்காது பெற்றுக்கொள்வேன்
- தடுப்பூசி பெற்ற மற்றவர்களுக்கு என்ன நடக்கிறது என்று பார்த்து பின்னர் நான் பெற்றுக்கொள்வேன்
- உடனடியாக பெற்றுக்கொள்ள மாட்டேன், எதிர்வரும் காலத்தில் சிலநேரம் பெற்றுக்கொள்வேன்
- ஒருபோதும் பெற்றுக்கொள்ள மாட்டேன்
- தெரியாது / நிச்சயமில்லை

“நீதி, உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான உலகளாவிய முன்முயற்சியானது (Global Initiative for Justice Truth and Reconciliation (GIJTR) உளவியல்-சமூக ஆதரவு மற்றும் ஆவணப்படுத்தல் முதல் தடயவியல் மற்றும் சட்டம் வரையிலான பல்வேறு துறைகளில் நிபுணத்துவம் வாய்ந்த ஒன்பது உலகளாவிய அமைப்புகளைச் சேர்ந்த அழுத்தம் கொடுப்பவர்கள், ஆர்வலர்கள் மற்றும் பயிற்சியாளர்களை ஒன்றிணைக்கின்றது. முரண்பாடுகளுக்கு முகம் கொடுக்கின்ற அல்லது முரண்பாடுகளில் இருந்து விடுபட்ட சமூகங்களுக்கான நியாயமான மற்றும் சமாதானமான எதிர்காலத்தை உருவாக்குவதில் அவர்கள் ஒன்றாக இணைந்து உதவுகின்றார்கள்.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (CPA) என்பது ஒரு சுயாதீனமான, பக்கச்சார்பற்ற அமைப்பாகும். அது பிரதானமாக ஆட்சி மற்றும் முரண்பாடுகளைத் தீர்த்தல் ஆகியவற்றின் மீது அவதானம் செலுத்துகிறது. பொதுக் கொள்கை விவாதத்திற்கு சிவில் சமூகத்தின் பங்களிப்பு இன்றியமையாதது என்பதுடன் அது வலுப்படுத்தப்பட வேண்டும் என்ற உறுதியான நம்பிக்கையால் 1996 இல் ஸ்தாபிக்கப்பட்டது. பொதுக் கொள்கைகள் விமர்சன ரீதியாக திறனாய்வு செயற்படல், மாற்று வழிகளை இனங்காணல் மற்றும் அதை விரிவாக்கல் ஆகியவை பற்றிய ஆய்வு மற்றும் அழுத்தம் கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் போன்றவை தொடர்பில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அர்ப்பணிப்புடன் செயல்பட உறுதிகொண்டுள்ளது.

முகவரி: 6/5, லெயாட்ஸ் வீதி, கொழும்பு 5, இலங்கை
தொலைபேசி: +94(11)2081384-6
தொலைநகல்: +94(11)2081388
இணையத்தளம்: www.cpalanka.org

சோஷல் இன்டிகேட்டர் (SI) என்பது மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் (CPA) கருத்துக்கணிப்பு ஆய்வுப் பிரிவாகும். இது இலங்கையில் சமூக மற்றும் அரசியல் விடயங்கள் தொடர்பில் நிரந்தரமானதும், தொழில்முறையானதும் மற்றும் சுயாதீனமானதுமான ஒரு கருத்துக்கணிப்பு நிலையத்திற்கான நீண்டகால வெற்றிடத்தை நிரப்பும் வகையில் 1999ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. கருத்துக்கணிப்பு என்பது ஜனநாயகத்தை வலுப்படுத்தும் ஒரு கருவி என்ற வலுவான நம்பிக்கையின் உந்துதலால், ஆரப்பித்ததில் இருந்தே ஏராளமான சமூக-பொருளாதார மற்றும் அரசியல் விடயங்கள் குறித்து சோஷல் இன்டிகேட்டர கருத்துக்கணிப்புக்களை நடாத்தி வருகின்றது.

முகவரி: 160G, பூர்வாராம வீதி, கிருலப்பனை, கொழும்பு 05
தொலைபேசி: +94 11 2826010
இணையத்தளம்: http://cpalanka.org/survey-research/
மின்னஞ்சல்: sakina@cpasocialindicator.org